**STARTING TIME 12.31 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 146/2019**

Deposition of **D.W.2** witnesses for defendant Solemnly affirmed by Tr. S. Gopi, Grade-II Bench Clerk of this court, on 10.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **சேகர்** Father's Name : **சக்கரவர்த்தி**

Village : **தக்கோலம் கிராமம், அரக்கோணம் வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம்.**

Age : 59

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பாகப் பிரிவினைக் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான். எந்தெந்த சொத்துக்களுக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், தக்கோலம் கிராமத்தில் உள்ள வீட்டிற்காக வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியவில்லை. தாவா சொத்தின் அளவுகள் தெரியுமா என்றால், 16 அடிக்கு 160 அடி ஆகும். தாவா சொத்து தக்கோலம் கிராமத்தில் எந்த தெருவில் உள்ளது என்றால், பஜார் தெருவில் உள்ளது.

2. கந்தசாமி ஆச்சாரி என்பவர் எனது தாத்தா என்றால், சரிதான். அவரின் மகன்கள் தான் நரசிம்ம ஆச்சாரி, வரதாச்சாரி, கோவிந்தராஜ் ஆச்சாரி மற்றும் சக்கரவர்த்தி ஆச்சாரி ஆகியோர்கள் என்றால், சரிதான். மேற்படி 4 பேருக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மேற்படி நால்வரும் தாவா சொத்தை கடந்த 05.03.1955 அன்று தாயாரம்மாள் என்பவரிடமிருந்து கிரையம்

பெற்றார்கள் என்றால், சரிதான். அக்கிரையத்திற்கு பிறகு மேற்படி 4 பேரும் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால், சரியல்ல, காரணம் தாவா சொத்தை கிரையம் பெற்ற போது அதற்கான தொகையை எனது பெரியப்பாவான கோவிந்தராஜ் ஆச்சாரி தான் கொடுத்தார், அப்போது முதன் முதலில் சொத்தை வாங்குவதால் சகோதரர்கள் நான்கு பேர் பெயரிலும் சேர்ந்து சொத்தை வாங்குமாறு எனது பாட்டி கூறினார், அதனால் மேற்படி நான்கு பேர் பெயரிலும் கூட்டாக கிரையம் பெறப்பட்டது, இருப்பினும் எனது பெரியப்பாவான கோவிந்தராஜ் ஆச்சாரி தான் முழுமையாக அனுபவித்து வந்தார். மேற்படி விவரங்கள் கிரையப் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

3. அதுபோல் தாவா சொத்திற்காக கிரைய தொகை முழுவதையும் எனது பெரியப்பா கோவிந்தராஜ் ஆச்சாரி தான் கொடுத்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால், இல்லை. மேற்படி கிரையத்தின் போது எனக்கு என்ன வயது என்றால், அப்போது நான் பிறக்கவே இல்லை. மேற்படி கிரையத்திற்கான கிரைய தொகையை எனது பெரியப்பா தான் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது, ஆனால் அந்த விவரத்தை எனது அப்பா என்னிடம் கூறியுள்ளார்.

4. எனது பெரியப்பா கோவிந்தராஜ் ஆச்சாரி தான் தாவா சொத்தை முழுமையாக அனுபவித்து வந்தார் என்பதற்காக பட்டாவோ, வரி ரசீதோ உள்ளதா என்றால், அவர் தான் வரி ரசீது கட்டி வந்தார். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

5. வா.சா.ஆ.1 கிரையத்திற்கு பின்னிட்டு தாவா சொத்தில் மேற்படி 4 சகோதரர்களும், இரண்டு கடைகளை கட்டினார்கள் என்றால், சரியல்ல, எனது பெரியப்பா கோவிந்தராஜின் வாரிசுகள் தான் தாவா சொத்தில் கடைகள் கட்டினார்கள். எந்த வருடம் அதுபோல் கட்டிடம் கட்டினார்கள் என்றால், 1990–ம் ஆண்டு கட்டினார்கள். மேற்படி கோவிந்ராஜ் ஆச்சாரியின் வாரிசுகள் தாவா

சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு முன்பு பஞ்சாயத்தில் அனுமதி எதுவும் வாங்கினார்களா என்றால், வாங்கியுள்ளார்கள். அந்த அனுமதியை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். அந்த அனுமதியில் கட்டிடம் கட்டப்பட்ட சொத்தின் அளவு எவ்வளவு இருந்தது என்று தெரியுமா என்றால், நினைவில் இல்லை.

6. நரசிம்ம ஆச்சாரி எப்போது காலமானார் என்று தெரியுமா என்றால், தெரியவில்லை, ஆனால் அவர் காலமாகிவிட்டார். நரசிம்ம ஆச்சாரியின் மனைவி பெயர் 1–ம் வாதியான கேனாம்பாள் என்றால், சரிதான். 2–ம் வாதி அவரது மகள், 3–ம் வாதி அவரது மகன் என்றால், சரிதான். வரதப்பா ஆச்சாரி எப்போது காலமானார் என்று தெரியுமா என்றால், தெரியவில்லை.

7. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் குன்றத்தூர் கிராமத்தில் உள்ள நிலங்கள் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணமானது வரதப்பா ஆச்சாரியின் மனைவி சாரதம்மாள் மற்றும் அவரது மகள் ராணியம்மாள் பெயருக்கு, வரசப்பா ஆச்சாரியின் சகோதரர்களான கோவிந்தராஜ் ஆச்சாரி மற்றும் சக்கரவர்த்தி ஆச்சாரி ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த அக்கு விடுதலைப் பத்திரம் என்றால், சரிதான்.

8. பி.வா.சா.ஆ.2 ஆவணமானது மேற்படி கோவிந்தராஜ் மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர் பெயருக்கு மேற்படி சாரதம்மாள், ராணியம்மாள் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த அக்கு விடுதலைப் பத்திரம் என்றால், சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களும் ஒரே தேதயில் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த இரண்டு ஆவணங்களிலும் தாவா சொத்தை குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 12.54 P.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.04.10 16:13:15 +0530